# கடிதங்கள்

9 ஆம், 10 ஆம், 11 ஆம்
ஆண்டுக்குரியவை

ஆக்கம்:

**செ. கதிர்காமத்தம்பி** B. A., Dip-in-Ed.

**சி. சந்திரமௌலீசன்** B. A.

பரி. யோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



1988 முதல் 1993 வரையான
G. C. E. (O/L)
கடித வினாக்களுக்கான
விடைகளையும் கொண்டுள்ளது.

# கடிதங்கள்

9ஆம், 10ஆம், 11ஆம் ஆண்டுகளுக்குரியவை

கடிதங் கற்றுக்
கடிதம் எழுத — இக்
கைந்நூல்
கைகொடுக்கும்.

ஆசிரியர்

தொடர்பு:
செ. கதிர்காமத்தம்பி
பரி. யோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

விலை: ரூபா. 15.00

குறிப்பு: 1

கடிதங்கள் அனைத்தும் முகப்பு, உடல், முடிப்பு – ஆகிய மூன்று உறுப்புக்களையும் கொண்டு அமைதல் வேண்டும்.

முகப்பு: இது எழுதுபவரின் விலாசம், (வலதுபுற மேல் மூலை) எழுதுபவர்க்கும் எழுதப்படுபவர்க்கும் உள்ள தொடர்புக்குரிய விளிப்பு என்பவற்றைக் கொண்டமையும்

உடல்: கடிதத்தில் அமையவேண்டிய செய்தியை இது தெளிவு படுத்தும். இதனைக் கூறுபடுத்திப் பந்திகளாக அமைத்தல் சிறப்புடையது.

முடிப்பு: இதில் தொடர்புரையும், கையொப்பமும் இடம் பெறல் வேண்டும்.

---

குறிப்பு: 2

விளிப்பினையும் முடிப்பினையும் எழுதுவோர்க்கும், எழுதப்படுவோர்க்கும் உள்ள தொடர்பு நோக்கி வேறு படுத்தி அமைத்தல் வேண்டும்.
கடிதத்தில் நிறுத்தற் குறியீடுகள் சரியாக இடம்பெறுதல் வேண்டும்.

---

குறிப்பு: 3

G. C. E. (O/L) பரீட்சைக்கு புள்ளி வழங்கப்படும் முறை

i) அமைப்பு → 06 புள்ளிகள்

ii) பொருள் விரிவும் கருத்துத் தெளிவும் → 08 புள்ளிகள்

iii) மொழிநடை → 06 புள்ளிகள்

மொத்தம் 20 / 200 புள்ளிகள்

## உறவுமுறைக் கடிதம்

16./A, கிளிபேட் வீதி,
கொழும்பு-4.
04.02.94.

அன்பின் தங்கை மீராவுக்கு,

27.02.'94. திகதியிட்டு நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்துள்ளது. அனைத்தும் ,வாசித்து அறிந்து கொண்டேன். இவ்விடம் நான் நலமேயுள்ளேன். அதுபோல நீங்கள் அனைவரும் நலமே இருக்க இறையருள் வேண்டுகின்றேன்.

அப்பா சிறிது சுகவீனமுற்றுத் தேறியுள்ளார் என்று எழுதியிருந்தீர்கள். மனத்திற்கு வேதனையாக இருந்தது. அவரை எக்கடினமான வேலைகளையும் செய்யவிடாது கவனிப்பது உங்கள் ஒவ்வொருவரதும் கடனாகும். எமது முருகன் கோயில் திருவிழா இனிது நிறைவேறியது மிகவும் சந்தோசம். தேர்த்திருவிழாவிற்கு வருவதற்கு முயற்சித்தேன். முடியவில்லை. ஆனால் அப்பதினைந்து தினங்கள் நானும் விரதம் அனுட்டித்தேன்.

கடிதத்தில் எமது அயல்வீட்டு அருணாசலம் மாமா விபத்துக்குள்ளாகிக் காலில் முறிவுபட்டுள்ளார் என்பது எனக்குப் பெருங் கவலையைத் தந்தது. அவர் உழைப்பிலேயே அவரது குடும்பம் வாழ்ந்து வந்தது. பணத்திற்கு என்ன செய்கிறார்களோ தெரியவில்லை. அப்பாவிடம் கூறி அவர்களுக்கு இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.

உமது தவணைப் பரீட்சைப் புள்ளிகளைக் குறிப்பிட்டிருந்தீர். திருப்திகரமாக இருந்தமை என் மனத்துக்கு மகிழ்ச்சியை அளித்தது. எனது பாராட்டுக்கள். தொடர்ந்தும் இந்நிலைமையைப் பேணுவீர் என்ற நம்பிக்கை உண்டு. தம்பி சுரேசின் படிப்பிலும் கவனம் செலுத்தவும். அவன் கேட்டு எழுதிய பொருட்கள் அனைத்தினையும் நண்பன் மகேஸ்வரன் வருகிற கிழமை வரும்போது கொடுத்து விடுகின்றேன். தற்சமயம் மகேஸ்வரன் எனது அறையிலேயே தங்கியுள்ளான்.

இக்கடிதத்துள் ரூபா ஆயிரம் அப்பாவின் பெயரில் தபாற் கட்டளையாக இணைத்துள்ளேன். கிடைத்ததும் பதில் போடவும். புதுவருடத்துடன் ஊருக்கு வர எண்ணியுள்ளேன். இம்மாத முடிவில் எனது பதவியில் உயர்வு கிடைக்கும் போற்தெரிகின்றது. உயர்வு கிடைத்தால் ஊதியமும் உயர வழியுண்டு. மாலை வேளைகளில் கணனி நெறியைக் கற்றுக் கொண்டிருக்கின்றேன். விரைவில் உங்களை நேரிற் சந்திக்கும் ஆவலுடன் இச்கடிதத்தினை நிறைவு செய்து கொள்கின்றேன்.

அன்புள்ள அண்ணன்
கி. உ. கனகராசா

## விபரமறிதல் (அலுவலகக் கடிதம்)

மகாஜனக் கல்லூரி,
அம்பனை,
தெல்லிப்பழை.
02.02.94.

பதிவாளர்,
பேராதனைப் பல்கழைக் கழகம்,
பேராதனை.

ஐயா,

### விவசாயநெறி விண்ணப்பப் படிவம்

20.01.94 வீரகேசரி நாளிதழில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விவசாய ஆய்வுக் கற்கைநெறி ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், அதற்குத் தகுதிவாய்ந்த மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் விளம்பரப்படுத்தியிருந்தீர்கள். அத்துடன் அந்நெறி பற்றிய விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பதிவாளரிடம் நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கு அமைய இக் கடிதத்தினை எழுதுகின்றேன்.

இக் கற்கைநெறியில் இணைந்து கொள்ள நான் விரும்புகின்றேன். ஆனால், இந்நெறி எம்மொழியில் நடைபெறவுள்ளது. இது கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர விஞ்ஞானப் பரீட்சையில் சித்தி எய்தியவர்களுக்கு உரியதா? பட்டதாரி ஆசிரியர்களுக்குரியதா? வயதெல்லை யாது? முழு நேரக் கற்கைநெறியா? பகுதி நேரக்கற்கை நெறியா? என்ற விபரங்கள் எதனையும் அறிய முடியவில்லை. நான் ஒரு பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியர். இது எனக்கு ஏற்புடையதாக அமையுமா என்பதனை அறிய ஆவலாகவுள்ளேன்.

விளம்பரத்தில் குறிப்பிட்டவாறு யாழ்ப்பாணத்தில் இருந்து இவ் விபரங்களை மட்டும் பெறுவதற்காகப் பேராதனைக்கு வருவது உசிதமான ஒன்றாக அமையாது என்பதை நீங்களும் அறிவீர்கள் எனக் கருதுகின்றேன். அதனால் உங்கள் அறிவுறுத்தலுக்கு ஏற்ப தபாலுக்குரிய முத்திரைகளை ஒட்டி எனது முகவரியிட்ட உறையையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

தயவு செய்து குறிப்பிட்ட திகதிக்குள் விண்ணப்பிக்கக் கூடியதாக இக் கற்கைநெறி அடங்கிய கைந்நூலினையும், விண்ணப்பப் படிவத்தினையும் அனுப்பி வைக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள,
இ. இராசரத்தினம்

## அழைப்பிதழ்க் கடிதம்

நடேஸ்வராக் கல்லூரி,
காங்கேசன் துறை.
03-12-93.

உதவிக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டக் கல்விக் காரியாலயம்,
மருதனாமடம்.

மதிப்புக்குரிய ஐயா,

### தமிழ் விழா அழைப்பு

எமது கல்லூரியின் 1994 ஆம் ஆண்டுக்கான தமிழ்விழா எதிர் வரும் தைத்திங்கள் பத்தாம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு எமது பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முத் தமிழுக்கும் முக்கியத்துவமளிக்கும் இவ்விழா எமது கல்லூரியின் ஆண்டு நிகழ்வுகளில் ஒன்றாகும்.

இவ்விழாவிற்கு இம்முறை தங்களையும் தங்கள் துணைவியாரை யும் சிறப்பு விருந்தினராக அழைத்துமகிழ எமது கல்லூரி தீர்மானித் துள்ளதால் எமது பணிவான வேண்டுகோளை ஏற்றுக்கொள்வீர்க ளெனக் கருதுகின்றோம். இவ்விழாவையொட்டி ஒரு சிறப்பு மலரை வெளியிடவுள்ளோம். அதில் அமைந்துள்ள ஆக்கங்களை விரைவில் தங்களுக்கு அனுப்பிவைக்கின்றோம். அதில் உள்ள மாணவர்களது படைப்புக்களையும், விழாவில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளையும் பார்த்து எமது மாணவர்களுக்குப் பயனுறும் வகையில் ஓர் ஆய்வு ரையை அரைமணி நேரத்துக்குள் ஆற்றும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்விழாவையொட்டி இடம்பெற்ற போட்டிகளில் பரிசில் பெற்ற வர்களுக்கான பரிசில்களையும இவ்விழாவில் வழங்கவுள்ளோம். இவற் றைத் தங்கள் துணைவியார் மூலம் வழங்குவது சிறப்புடையது எனக் கருதுகின்றோம்.

நிறைவாக தாங்கள் எமது வேண்டுகோளைச் செவிமடுத்து தங் கள் பதிலை அனுப்பிவைப்பீர்களானால் எமது விழா நிகழ்ச்சி நிர லைப் பூர்த்திசெய்யப் பெரிதும் உதவியாக அமையும் என அன்புடன் கேட்டு அமைகிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
க. பூரணம்பிள்ளை
(அதிபர்)

101, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
04-04-93.

பொது முகாமையாளர்,
மக்கள் வங்கி,
கொழும்பு.

ஐயா,

எழுது வினைஞர் பதவி.

தங்கள் வங்கியில் எழுதுவினைஞர் பதவிக்கான விண்ணப்பம் 01-03-93 அர்சாங்க வர்த்தகமானியில் கோரப்பெற்றிருப்பது அறிந்தேன். அதற்கு அமைய இவ்விண்ணப்பத்தைத் தங்களுக்கு அனுப்பி வைக்கின்றேன்.

நான் மரபுவழி இலங்கைப் பிரசை. 26.01. '75 இல் பிறந்த எனது வயது 18. எனது கல்வித் தகைமைகள் க. பொ. த. சாதாரண பரீட்சையில், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம். சமூகக் கல்வி ஆகிய பாடங்களில் அதிவிசேட சித்தியும், ஏனைய மூன்று பாடங்களில் திறமைச் சித்தியும் எய்தியுள்ளேன். க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகம், பொருளியல், கணக்கியல், அரசியல் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியும் பெற்றுள்ளேன்.

யாழ் பரியோவான் கல்லூரியிற் கற்ற நான் அங்கு மாணவ தலைவனாகவும், உதைபந்தாட்ட அணியில் ஓர் உறுப்பினனாகவும், தமிழ்மன்றச் செயலாளராகவும், சாரணிய இயக்க உறுப்பினனாகவும் அங்கம் வகித்துள்ளேன்.

மேற்கூறியவற்றிற்கான அத்தாட்சிப் பிரதிகளுடன், எனது கல்லூரி அதிபரிடமும், நல்லூர் உதவி அரசாங்க அதிபரிடமும் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்களையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

எனது விண்ணப்பத்தை ஏற்றுத் தங்கள் பரிசிலனைமுறையில் எனக்கு இப்பதவி கிடைக்குமேயானால் என்னால் இயன்றவரை திறமையாகவும், உண்மையுடனும் கடமையாற்றுவேன் என உறுதியளிக்கின்றேன்.

இங்கனம்,
தங்கள் உண்மையுள்ள,
இ. ஜெயசிங்கம்.

## முறையீட்டுக் கடிதம்

புனித மரியாள் வித்தியாசாலை,
கிளிநொச்சி.
05.02.94.

கௌரவ கல்வி அமைச்சர்,
கல்வி அமைச்சு,
கொழும்பு.

ஐயா,

### விஞ்ஞான கூடமும், நூல் நிலையமும் அமைத்தல்

அடிப்படை வசதிகள் குறைந்த பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கி அவற்றிற்கு நூல் நிலையங்களையும், விஞ்ஞான ஆய்வு கூடங்களையும் அமைத்துக் கொடுப்பதில் தங்கள் அமைச்சு அக்கறை கொண்டுள்ளது என்பதை அண்மைக்காலப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்து அதற்கு அமைய இம்மடலை வரைகின்றேன்.

எமது பாடசாலை முற்றிலும் கிராமப்புறச் சூழலில் அமைந்துள்ளது. இன்றுவரை இதற்கென ஒரு நூல் நிலையமோ, விஞ்ஞான ஆய்வு கூடமோ, விளையாட்டு மைதானமோ கிடையாது. இந்நிலையிலும் இப்பாடசாலை தேசிய பரீட்சைகளிலும், மாவட்டப் போட்டிகளிலும் சாதனைகள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு அத்தாட்சியாகக் கடந்த பத்துவருடப் புள்ளிவிபரங்களை இக்கடிதத்துடன் இணைத்துள்ளேன்.

இப்பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒரு விளையாட்டு மைதானத்தினை ஆறுமாத கால எல்லைக்குள் கொள்வனவு செய்து தருவதற்கு முன்வந்துள்ளது. எம்மூர் தனவந்தர் மூவர் ரூபா ஐம்பதாயிரத்துக்கு நூல்கள் பெற்றுத்தர இணங்கியுள்ளனர். ஆனால் அந்நூல்களைப் பேணிப்பாதுகாப்பதற்கான கட்டடம் எமது பாடசாலையில் இல்லை.

தயைகூர்ந்து மேற்கூறியவற்றை மனதிற் கொண்டு எமது பாடசாலையில் ஒரு நூல் நிலையத்தினையும், விஞ்ஞான ஆய்வு கூடத்தினையும் கட்டுவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து தரும்படியும் அவ்வாய்வு கூடத்திற்கான உபகரணங்களையும் பெற்றுத்தரும்படியும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன். இவ்வுதவி எமக்குக் கிடைக்குமானால் எமது பாடசாலை ஒரு பூரணத்துவமுள்ள பாடசாலையாக அமைவது மட்டுமன்றி க. பொ. த. உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்கக் கூடிய நிலையையும் அடையும். அவ்விதம் அமையுமானால் எமது கிராமப்புற மாணவர்கள் பல சிரமத்தின் மத்தியில் நகர்ப்புறப் பாடசாலைகளை நாடும் நிலையும் தவிர்க்கப்படும்.

தங்களிடமிருந்து ஒரு சாதகமான பதிலை எதிர்நோக்கிக் கடிதத்தத்தினை நிறைவுசெய்கின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
ஜெ. சிக்மறிங்கம்

27, பூம்பொழில் வீதி,
எழில்நகர்.
06-08-94.

அன்புள்ள தம்பிக்கு,

புலமைப் பரிசில் பெற்று புதுநாடு புகுவதற்கு முன்னர் அண்ணன் கூறும் சில புத்திமதிகள். ஆற்றுப்படுத்துவதில் உன் அண்ணன் ஆற்றல் பெற்றவனல்ல, ஆனாலும் அவை என் அறிவுக்கு எட்டிய அன்புக் கட்டளைகள்.

''சுவர் இருந்தாற்றான் சித்திரம் எழுதலாம்'' என்பர். நீ செல்ல இருக்கும் நாடு குளிருக்குக் குறைவில்லாதது எனக் கற்றுள்ளேன். அதற்கு ஏற்றாற்போல் உடல்நிலையை உறுதி செய்து கொள்ளவேண்டியது உனது முதற்கடனாகும்.

எந்தத் தீய பழக்கத்தாலும் தீண்டப்படாதவன் நீ என்பதனை நான் அறிவேன். ஆனால் நீ காலடிவைக்கப்போகும் நாடோ எமது கலாச்சாரத்தில் நின்று வேறுபட்டது. அவற்றில் எமக்கு ஏற்புடையவையும் இருக்கலாம் ஏற்கமுடியாதவையும் இருக்கத்தான செய்யும். நல்லதையும் கெட்டதையும் நன்கு உணர்ந்து நடந்துகொள்வாய் என்ற நம்பிக்கையுண்டு.

நல்ல நண்பர்களின் சேர்க்கை உன்னை நன்னிலைப்படுத்தும் அந்நிய நாட்டில் அவர்கள்தான் எந்நிலையிலும் உதவியாளர்களாக அமைவர்.

இங்கு நீ கற்ற காலத்தில் ஒளிவிளக்காய் உயர்ந்து நின்றாய். அவ்வொளி எதிர்காலத்தில் கலங்கரை விளக்காய் அமையவேண்டும் என்பதைக் கனவிலும் நனவிலும் கருதிக் கற்கத்தவறமாட்டாய் என்பது என் எண்ணம்.

எமது குடும்பப் பற்று, பாசம் பற்றி நான் சொல்லி நீ உணர வேண்டியதில்லை. பெற்றோர் வாடதிருக்க மாதமொரு மடல் வரைய மறவாதே. தினமும் எம்மூர் முருகன் வாயிலில் உன்னைக் காணலாம் என்பர் எம்மூர் மக்கள். அவ்வேலவனைத் தினமும் தியானித்துக் கொள். இத்துடன் எல்லாம் வல்ல இறைவன் என்றும் உனக்குத் துணை நிற்கவேண்டிக் கடிதத்தை நிறைவு செய்து கொள்ளுகின்றேன்.

''கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.''

அன்புள்ள அண்ணன்,
எ. சேவியர்

## பாராட்டுக் கடிதம்

77, எழில்வன வீதி,
பூநகர்.
07.01.93.

அன்புள்ள சிநேகிதி மாருதிக்கு,

சென்ற வெள்ளிக்கிழமை "தினமலர்" நாளிதழில் நீர் முதற் பெண் அரச அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளீர் என்பதைப் படித்தும் ஆனந்தம் அடைந்தேன். கண்கள் குளமாகியது. உன்னைக் கட்டியணைத்து வாழ்த்த வேண்டும் என்று உள்ளம் துடித்தது.

மாருதி, உன்னைச் சிறுவயது முதல் நன்கு அறிந்தவள் நான். ஏழ்மையான குடும்பத்தில் உதித்து ஒவ்வோர் எதிர்புக்களையும் ஏணிப் படியாக்கியவள். எதிலும் சறுக்கியவள் அல்ல, எதிலும் துணிவுடன் நீ ஈட்டிய சாதனைகள் பாடசாலை மட்டத்தில் மட்டுமல்லப் பல்கலைக் கழகத்திலும் பரிணமித்திருந்தன. படிப்பில் மட்டுமன்றி விளையாட்டிலும் நீ வீராங்கனையாக விளங்கியவள்.

இவற்றை எல்லாம் விஞ்சுமளவுக்கு இன்று சிறகடித்து உயர் நிலைக்கு உயர்ந்துவிட்டாய். பெண்ணுரிமை பேசும் இக் காலத்தில் அதற்குச் செயல்வடிவம் கொடுத்த திறன் எல்லோர்க்கும் ஏற்புடைய ஒன்றல்ல. நீ உதவி அரச அதிபராக முல்லை நகரில் மூன்றாண்டு கடமையாற்றிய காலத்தில் விதவைகளுக்காகவும் அனாதைகளுக்காகவும் அமைத்த நிறுவனங்கள் இன்று பூத்துக் குலுங்கும் சோலைகளாக வளர்ந்துள்ளன. அந்தச் சீவன்களின் ஆசிதான் இன்று உன்னை இந்நிலைக்கு உயர்த்தியதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

நீ இன்று பதவி ஏற்றுள்ள மாவட்டத்திலும், குறைகளை நிறைவு செய்து, களைகளைக்கண்டறிந்து, களைந்து, வளர்க்க வேண்டியவற்றை வளர்த்து, உன்புகழையும் வளர்த்துக்கொள்வாய். வளர்க்க வேண்டும் என வாழ்த்துகின்றேன். எமது மாவட்டத்திலும் இதே பதவியில் உன்னைக் காண விரும்புகின்றேன்.

"மலர்விழி எனது வெற்றிகளைக் கண்டு முதலிற் பாராட்டுபவள் நீதான்" என்று முன்பெல்லாம் சொல்லுவாய். அவை இன்றும் எனது மனத்தில் பசுமையாகவுள்ளன. இம்மடலும் அவ்விதமே அமையுமானால் நான் பாக்கியசாலி எனக் கருதுகின்றேன்.

அன்புள்ள,
சிநேகிதி,
ம. மலர்விழி

யாழ் போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
08-02-92.

அதிபர்,
பரிசுத்த சேவியர் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

ஐயா,

தங்கள் பாடசாலை மாணவர்கள் எமது வைத்தியசாலை வளாகத்துள் ஆற்றிய அரும்பணிகள் பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளது. அதற்கு நன்றி நவிலும் பணியில் இக்கடிதத்தினை வரைகின்றேன்.

உங்கள் பாடசாலை கல்வியிலும் ஒழுக்கத்திலும் யாழ் மாவட்டத்திலேயே உயர்ந்து விளங்குகின்றது. இன்று மேலும் ஒருபடி உயர்ந்து சமூகசேவையிலும் பின்நிற்போரல்ல என்பதனை நிரூபித்துள்ளீர்கள். மாணவர்கள் கடந்த முப்பது தினங்களாக மாலை வேளைகளில் மற்றவர்களுக்கு எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்தாவண்ணம் பண்புடனும் ஒழுக்கத்துடனும் தங்கள் பணியைச் சரிவரச் செய்துள்ளனர். அவர்கள் ஆற்றிய சேவைகளிற் குறிப்பிடத்தக்கவை:

சுகாதாரச் சீர்கேட்டுடன் அமைந்திருந்த வைத்தியசாலை வளாகப் புல்பூண்டுகளை அகற்றிப் புதுப்பொலிவு பெறச் செய்தது. கட்டடங்களில் உள்ள அழுக்குகளை அகற்றித் தூசுதுணுக்குகளைத் துடைத்துத் துப்பரவு செய்தது. நோயாளர் விடுதிகளுக்கும், மருத்துவப்பிரிவுகளுக்கும், பொதுமக்கள் நலன் கருதிப் பெயர்ப் பலகை பொருத்தியது. நோயாளரது படுக்கையைச் சீர்செய்து கட்டில்களுக்கும், நோயாளருக்கு வழங்கும் அலுமாரிகளுக்கும் நிறம் தீட்டியது. வைத்தியசாலை வளாக அமைப்பினைத் தெளிவுற வரைந்து மக்கள் பார்வைக்குத் தொங்கவைத்தமை என்பனவாகும்.

இவர்கள் பணியை நாம் ஒரு பெரும் பேறாகவே கருதுகிறோம். பணியாற்றிய மாணவர்கள் அனைவருக்கும் எமது நிர்வாகத் துறை நற்சான்றிதழ்கள் வழங்க முன்வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நிறைவாக உங்கள் மாணவர்கள் ஆற்றிய நற்பணி, பயன்கருதாது செய்தசேவை, சொல்லாமற் செய்த உதவி, காலத்தாற் செய்த நன்றி இவற்றிற்கு எமது நிறுவனம் என்றும் கடமைப்பாடும் நன்றியுடையதாகவும் இருக்கும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,
சி. நற்குணம்.
(வைத்திய அத்தியட்சகர்)

222, சந்தனச்சாலை,
சண்பகநகர்.
09-12-92.

அன்புள்ள நண்பன் சாந்தனுக்கு,

உனது தந்தையார் இவ்வுலகவாழ்வை நீத்துள்ளார் என்னும் இன்னல்தரும் செய்தியை இன்றுகாலை நண்பன் புஸ்பராசா மூலம் தெரிந்துகொண்டேன். காலம் கடந்த நிலையில், கலக்கத்தின் நடுவில் உன்னை நேரிற் காண்பதற்கு முன்னர் இக்கடிதத்தினை வரைகின்றேன்.

முதலில் உனக்கும், உன் குடும்பத்தில் உள்ளவர்க்கும் என் சார்பிலும் எனது வீட்டார் சார்பிலும் எமது கவலையையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்து உமது அப்பாவின் ஆத்துமா ஆண்டவன் அடிகளில் அடைக்கலம் அடைய அஞ்சலி செய்கின்றேன்.

நீங்கள் அனைவரும் அல்லலுற்றவேளை அயலிருந்து ஆறுதல் அளிப்பதற்கு யான் அருகதையற்றவனாகிவிட்டேன் என்பதை எண்ணும்போது உள்ளம் உருக்குலைகின்றது. உனது தந்தையார் உங்கள் குடும்பத்துக்கு மட்டுமல்ல ஊருக்கே வழிகாட்டிய உத்தமர். வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்ந்தவர். அவரது ஆசைகள் அனைத்தும் உன்னாலேயே நிறைவு செய்யப்பட வேண்டும். தலைவனை இழந்து தவிக்கும் குடும்பத்துக்குக் கவலையை மறைத்து வழிநடத்தவேண்டிய தலைமகன் நீ. அவ்வாற்றல் உனக்கு உண்டு. அதேவேளை ஆண்டவன் துணையும் உண்டு.

நண்பா! புத்தபிரானிடம் ஒரு தாய் தன் பிள்ளையை உயிர்ப்பித்துத் தரக் கேட்டாள். பகவான் ''மரணம் இல்லா வீட்டில் ஒருபிடி மண் எடுத்து வா'' என்றார். உலகவாழ்க்கை சந்தை உறவு அதில் உனக்கும் எனக்கும் உள்ளது கண்ணீர் உறவு. விரைவில் நேரிற் சந்திக்கின்றேன்.

என்றும், உன் நண்பன்,
ஜேம்ஸ். செல்வம்

## பத்திரிகைக் கடிதம்

பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
10.01.94

பத்திராதிபர்,
வீரகேசரி,
கொழும்பு - 13.

ஐயா,

பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் பவனிவரும் தங்கள் பத்திரிகை மூலம் ஒரு செய்தியினை வெளியிட விரும்பி நிற்கின்றேன். தயைகூர்ந்து அதனை வெளியிட்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வடகிழக்கு மாகாணங்களில் கடந்த பத்தாண்டு காலமாக யுத்த மேகங்கள் படிந்திருப்பது பலரும் அறிந்ததே. இப் பிரதேச மாணவர்கள் மரணபயத்தால் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் தெரிந்த ஒன்றே. பல மாணவர்கள் அகதிகள், சிலர் அநாதைகள், பெரும்பாலானோர் தொழில் இழந்த பெற்றோரது பிள்ளைகள். பொருளாதாரத்தடை ஒரு புறம், பலரது பாடசாலைகள் தற்காலிகமான கொட்டகைகள். அத்தகைய பாடசாலைகளில் ஆய்வு கூடங்கள் இல்லை. நூல் நிலையங்கள் கிடையா.

இத்தகைய இன்னல்களின் மத்தியிலேயே மாணவர்கள் கற்று வருகின்றனர். வருடத்தில் பல நாட்கள் ஊரடங்குக் காலம். பாடசாலை நாட்கள் போதா. பாடத்திட்டம் முடிவதில்லை. கைவிளக்கில் படிப்பதற்கும் மண்ணெண்ணெய் விலையேற்றம், புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள் தட்டுப்பாடு. இந்நிலை இலங்கையில் எந்தப் பின்தங்கிய பிரதேசத்திலும் காணப்படுகின்றதா?

இத்தகைய இன்னல்களுக்கு மத்தியில் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் பல்கலைக் கழகத் தேர்வுக்கான வெட்டுப்புள்ளியை இப் பிரதேச மாணவர்களுக்கு உயர்மட்டத்தில் வைத்திருப்பது அநீதியான ஓர் அளவுகோலாகும். கல்வியுலகும், பல்கலைக்கழகமும், கல்வியமைச்சும் இதனைக் கவனத்திற் கொண்டு இவ் வெட்டுப்புள்ளி அளவை மிகக் குறைந்த எல்லைக்குக் கொண்டு வந்து மாணவர்களது துயர் துடைப்பார்களாக!

ஐயா, இச் செய்தி உங்கள் பத்திரிகை வாயிலாக வெளிவந்து பலன்கிட்டுமானால், பல மாணவச் செல்வங்களது வாழ்வுக்கு வழிகாட்டிய பெருமை உங்கள் நிறுவனத்துக்கே உரியதாகும். இந் நம்பிக்கையுடன் கடிதத்தினை நிறைவு செய்து கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
உண்மையுள்ள,
இ. பரந்தாமன்
(மாணவன்)

## குறைவெளிப்பாட்டுக் கடிதம்

சுழிபுரம்,
வட்டுக்கோட்டை.
11-2-1994

நிர்வாக அதிகாரி,
யாழ் போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

ஐயா,

### மருந்து விநியோகிக்கும் சீர்கேடு

27-1-94. வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் தங்களைச் சந்திப்பதற்காகத் தங்கள் காரியாலயத்துக்கு வந்து ஒரு மணிநேரம் காத்திருந்தும் சந்திக்கும் வாய்ப்புக்கிடைக்கவில்லை. அதனால் இக் கடிதத்தினை தங்கள் கவனத்திற்காக எழுதுகின்றேன். எண்ணிறைந்த பணிகளின் மத்தியில் எனது முறைப்பாடு ஒரு சுமையாக அமையு மானால் அதனைத் தயவுசெய்து பொறுத்துக் கொள்ளவும்.

தங்கள் நிர்வாகத்தின் கீழ் உள்ள வைத்தியசாலையில் மருத்து வப்பரிசோதனையை முடித்துக்கொண்டு காலை 8.30 மணியளவில் மருந்து பெறுவதற்காக ஒன்பதாவது நபராக நின்று கொண்டிருந் தேன். மருந்து விநியோகிக்கும் அனைவரும் அவ்வறையில் அமர்ந் திருந்த போதிலும் தங்கள்பணியை காலை 9 மணிக்கே ஆரம்பித் தனர். மருந்து விநியோகம் தொடங்கியதும் பல்வேறுபகுதிகளில் நின்ற பலர் நிரலைக் குழப்பிக்கொண்டு உட்புகுந்ததால் என்போன்ற வயோதிபர்களும், குழந்தைகளும், பெண்களும் பின் தள்ளப்பட்டோம். வலுவுள்ள சிலர் மருந்துவினியோகிக்கும் கடவையை மூடி முண்டிய டித்துத் தம் கருமத்தில் வெற்றி பெற்றுச் செல்வதைக் காண முடிந்தது. இதற்கிடையில் சிலரிடையே கைகலக்குமளவுக்கு வாய்ச்சண்டை ஏற்பட்டுச் சமாதானப்படுத்துவர்களையும் காணமுடிந்தது. மற்றும் வைத்திய சாலையில் வேலைசெய்வோர் பின்கதவால் மருந்துகளைப் பெற்று தம்மவர்க்கு உதவும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருந் தது. மருந்து விநியோகிப்பவர்கள் இவற்றை அறியாதவர்கள் போலவே செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

இவையாவும் பொதுமக்களது முறைகேடுகளே என்பதை நான் அறிவேன். ஆனாலும் ஒரு பணியாளரையோ. காவற்றுறை உத்தி யோகத்தரையோ இதற்கென நியமித்து இவ்வொழுக்கக் கேட்டை ஒழிப்பீர்களேயானால் பாராட்டுக்குரிய நிர்வாகியாகப் பலராலும் பாராட்டப் படுவீர்கள்.

நன்றி

இப்படிக்கு,
உண்மையுள்ள,
ந. நல்லசிவம்.

பதிவுத் தபால்

வாணி வாணிபக் களஞ்சியம்,
111, காங்கேசன்துறை வீதி.
யாழ்ப்பாணம்.
12.05.1994

விற்பனை முகாமையாளர்,
மேயர் ஏற்றுமதி இறக்குமதி நிறுவனம்,
112, காலி வீதி,
கொழும்பு - 3.

ஐயா,

எனது நிறுவனத்திற்குத் தேவையான பொருட்களை நேரடியாக உங்களிடம் இருந்து பெற விரும்பிக் கடிதம் வரைந்திருந்தேன். அதற்கு அமைய 5.5.94 திகதியிட்ட உங்களது கடிதத்தில் பொருட்கள் பற்றிய விபரம், கொள்வனவுத் தொகை, பணம் அனுப்பும் முறை பொருட்கள் அனுப்பிவைக்கப்படும் கால எல்லை, பொருட்களை ஏற்றிவரும் வாகனங்களுக்கான கூலி, கழிவுத்தொகை ஆகிய அனைத்து விபரங்களையும் தெளிவான முறையில் அறியத்தந்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உங்களது அறிவுறுத்தலுக்கு அமைய அப்பொருட்களுக்கான பட்டியலைத் தெளிவான முறையில் தயார் செய்து இக் கடிதத்துடன் இணைத்துள்ளேன். இவற்றைக் கூடிய விரைவில் அனுப்பிவைப்பீர்களேயானால் அது பயனுள்ளதாக அமையும்.

உங்களது நிபந்தனைக்கு அமைய பொருட்களின் கொள்வனவுத் தொகையையும் போக்குவரத்துச் செலவுக்கான தொகையையும் சேர்த்து ஒரே காசோலையாக ஒரு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரம் ரூபாவைத் தங்கள் நிறுவனத்தின் பெயருக்கு எழுதி இக் கடிதத்துடன் அனுப்புகின்றேன். (காசோலை விபரம்: இலங்கை வங்கி, கிளை 1 C/27. 003456)

உங்கள் கடிதத்தில் புதிதாக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்த பொருட்களுக்கு விற்பனை முகவர் தேவை என்பதனையும் குறிப்பிட்டிருந்தீர்கள். அதில் அக்கறையுள்ளவனாக நான் இருப்பதனால் அதற்கான முழு விபரங்களையும் அறியத்தரவும். பதிலை எதிர் பார்க்கிறேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள,
சி. மார்க்கண்டு
(முகாமையாளர்)

1938—புகையிரத விபத்தில் தந்தையை இழந்த நண்பனுக்கு ஒரு கடிதம்

101, நாவலர் வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.
12.12.88.

ஆருயிர் நண்பா!

"அருண், அருண்" என்று உன்னை அன்புடன் அழைக்கும் உனது அப்பா, கடந்த ஆறாந் திகதி இடம்பெற்ற புகையிரத விபத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார் என்னுந் தாங்கொணாச் செய்தியைப் பத்திரிகையிற் பார்த்து இடியோசை கேட்ட நாகம் போல் இதயம் கலங்கினேன். அவருடன் குறுகிய காலம் பழகிய என்னையே இப் பிரிவு உருக்குலைத்து உள்ளம் நெகிழ வைத்ததென்றால், உனது நிலை, உன் குடும்பத்தவர் நிலை எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

நண்பா! முதற்கண் என் சார்பிலும் என் குடும்பத்தவர் சார்பி லும் உனக்கும், உன் தாயார், சகோதரர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். உன் தந்தையாரின் ஆன்மா, ஆண்டவன் அடியில் அடைக்கலமாக வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

ஆடி அடங்கும் இவ்வுலக வாழ்வில் இறப்பை வென்றவர் எவரு மில்லை என்பது நான் கூறித்தான் நீ அறிய வேண்டிய ஒன்றல்ல. இவ்வின்னலுக்கு மத்தியில் நீ ஒரு புதுப் பொறுப்பைச் சுமந்தவனாய் இருக்கின்றாய். தலைவனை இழந்து தவிக்கும் உன் குடும்பத்துக் குத் தலைமகனாய் விளங்குகின்றாய். இவ்வேளை உன் கவலையைக் கட்டுப்படுத்திக் கலங்கித் தவிக்கும் உன் குடும்பத்துக்குக் கலங்கரை விளக் காய் வழிகாட்ட வேண்டியது உன் தலையாய கடன். அப்பா இல்லை என்ற நிலையை உன் வீட்டார் உணராத முறையிற் பணியாற்று. உன் தந்தையின் ஆசைகள் அனைத்தும் அறிந்தவன் நீ. அவர் வழி யில் நீயும் தொடர்ந்து நில். உலகுக்கு உயர்ந்தவராக, உத்தமராக வாழ்ந்த உன் தந்தை உன்னதமான பிள்ளையைப் பெற்றார் என்ற பெயரையும், பெருமையையும் நீ பெற வேண்டும்.

நீ அல்லலுற்ற வேளை, அருகிலிருந்து ஆறுதல் கூறி, ஆற்ற நான் கொடுத்து வைக்கவில்லை என்பது ஆறாத வேதனையைத் தருகின்றது. விரைவில் உன்னை நேரில் சந்திப்பேன் எனக் கூறிக் கடிதத்தை நிறைவு செய்கின்றேன்.

உன் ஆருயிர் நண்பன்,
இ. அருள்தாசன்

## 1989 — மூளைசாலிகள் வெளியேற்றம் பற்றி பேனா நண்பனுக்கு ஒரு விளக்கக் கடிதம்

12, திருநகர் வீதி,
யாழ்ப்பாணம்.
12.12.89.

அன்புள்ள நண்பன் நிலானுக்கு,

''மூளைசாலிகள் வெளியேற்றம் என்றால் என்ன?'' என்பதை விளங்கவைக்கவும் எனக்கேட்டு நீர் வரைந்த மடல் கைக்கெட்டியது. அதற்கு அமைய இதனை எழுதுகின்றேன். ''மூளைசாலிகள்'' என்ற சொல்லைத் ''திறமைசாலிகள்'' எனக் கொள்வதே ஏற்புடையது எனக் கருதுகின்றேன்.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கட்டணம் அறவிடாது இலவசமாகவே கல்வியைக் கற்பித்து வருகின்றனர். இப்பணிக்காக அரசு பெருமளவு நிதியைச் செலவிட்டு வருகின்றது. இதன் பயனாகத் தலைசிறந்த பொறியியலாளர்கள், பொருளாதார நிபுணர்கள், அறிவியல் அறிஞர்கள், மருத்துவ நிபுணர்கள், மற்றும் தொழில்நுட்ப அனுபவசாலிகள் போன்றோர் உருவாக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய திறமைசாலிகள் பயிற்சி பெற்றதும் பணநோக்கிற்காக வெளிநாடுகளுக்கு வேலை தேடி வெளியேறுகின்றனர். இதனால் இவர்களை நம்பிச் செலவு செய்த நாடு திறமைசாலிகளின் பற்றாக்குறையினால் படுகுழியிற் தள்ளப்படுகின்றது. பொருளாதாரத் திட்டங்கள் பின்னடைகின்றன. தொழில்நுட்பத்துறை முன்னேற முடியாத முட்டுக்கட்டை நிலைக்கு உள்ளாகின்றது. அயல்நாட்டு வைத்தியர்களையே அழைக்க வேண்டிய அவலநிலைக்கு நாடு உள்ளாகின்றது.

நாட்டுப்பற்று அற்றநிலை, நன்றியுணர்ச்சி இன்மை, உள்நாட்டுப் பிரச்சனைகளே இத்துன்பியல் நிலைக்குக் காரணமாகும். சட்ட நடவடிக்கைகளை வலுப்படுத்தினால் மட்டுமே இதனை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும். இது எமது நாட்டுக்கு மட்டும் உரிய ஒன்றன்று. கீழைத்தேச நாடுகள் அனைத்திலும் காணப்படும் ஒரு பிரச்சனையாகவுள்ளது. உனது ஆர்வத்துக்கு இக்கடிதம் சிறிதளவேனும் வழிகாட்டும் என நம்பி உனது பதிலில் இவை பற்றிய உனது கருத்துக்களை எழுதுவாய் என நினைக்கின்றேன்.

இப்படிக்கு,
உனது நண்பன்,
க. பரா

*1990—இலங்கை வரவிருக்கும் பேனா நண்பனுக்கு அவர் பார்த்து மகிழக்கூடிய மூன்று இடங்களை விபரிக்கும் கடிதம்*

108, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்,
12-12-90.

அன்புள்ள நண்பா,

இலங்கையில் பார்த்து இன்புறக்கூடிய மூன்று இடங்களை எழுதும்படி எழுதியிருந்தீர். எழில்மிக்க எமது தீவைப் பார்க்க எண்ணியதையிட்டு எல்லையற்ற மகிழ்ச்சி எய்துகின்றேன்.

எமது நாட்டின் தலைநகர் கொழும்பு, என்பது நீர் அறிந்ததே பிறநாடுகள் அனைத்துக்கும் இணைப்புமையமாக விளங்குவதும இதுவே. குறைந்த கட்டண உல்லாசப் பிரயாணிகளுக்கான விடுதிகளும், விடுமுறையை விருப்புடன் களிக்கக்கூடிய கடற்கரைகளும் கொண்ட இந்நகரிற் கண்டு களிக்கவேண்டிய இரண்டு முக்கிய இடங்கள் உள்ளன. ஒன்று உலகினில்புகழ் பெற்ற மிருகக் காட்சிச் சாலை. மற்றையது பழைமையைப் பறைசாற்றும் தொல்பொருள் நிலையம்.

அடுத்தது கண்டிநகர். இயற்கை அழகு, இனிய காலநிலை, மலைவளச்சிறப்பு, புத்தரின் புனித தந்த தாது பேணப்படும் புண்ணிய தலம் தலதாமாளிகை, இலங்கையின் மிகநீளமான நதியின் இருமருங்கிலும் உள்ள தாவரவியற் பூங்கா, பேராதனைப பல்கலைக்கழகமென்பன இந்நகரின் சிறப்புக்களாகும்.

மூன்றாவது அனுராதபுரம். இன்று வளர்ச்சி பெற்றுள்ள போதும் வரலாற்றுச் சுவடுகள் மலிந்த நகர். புராதன, அரண்மனைகள், ஆலயங்கள் என்பவற்றின் இடிபாடுகளை மட்டுமன்றிப் புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரசுக் கிளைமரம், அசோகனின் மைந்தன் மகிந்தன் தங்கிய மிகிந்தலையைப் பற்றி அறியவும் இந்நகர் உதவும்.

மேற்கூறிய மூன்றும் வெவ்வேறுபட்ட பௌதிக, பண்பாட்டு இயல்புகளைக் கொண்டவை மட்டுமன்றி மேலதிக சிறப்புக்களையும் கொண்டவை என்பதனை நீர் விருந்தினனாக வரும்போது விளக்கக் காத்துள்ளேன்

வணக்கம்

இப்படிக்கு,
உண்மையுள்ள,
சி. தனம்.

1991 — உமது பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தமிழ் விழாவை கண்டுகளிக்க வருமாறு நண்பனுக்குக் கடிதம்

புனித மரியாள் பாடசாலை,
புதுக்குடியிருப்பு,
கிளிநொச்சி.
12.12.'91.

அன்பின் நண்பன் அமுதனுக்கு,

எமது கல்லூரியின் தமிழ் விழா 8.1.92 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இது எமது கல்லூரித் தமிழ் மன்றத்தின் பொன் விழாவாகவும் போற்றப்படவுள்ளதால், முத்தமிழுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் முறையில் முழுநாள் விழாவாக இடம்பெற இருக்கின்றது. விழா காலை 9 மணிக்கே கால்கோளாகவுள்ளது. இது முற்றிலும் இயற்றமிழ் விழாவாகவே அமையும். இதில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. ஒன்று மன்றத்தின் மலர் வெளியீட்டு விழா. இதனைப் பேராசிரியர் சி. பேரம்பலம் வெளியிடவுள்ளார். இதன் முதற்பிரதியை முன்னைநாள் அதிபர் க. ஆறுமுகம் அவர்கள் பெற்றுக்கொள்ளவுள்ளார். மற்றையது பட்டிமன்றம். பாடசாலைப் பழைய மாணவர்க்கும் தற்போதைய மாணவர்களுக்கும் இடையே நடைபெறவுள்ளது. இதன் தலைப்பாக அமைய இருப்பது காவியங்கள் கலாசாரத்தை உருவாக்கினவா? சமயங்களை வளர்த்தனவா? என்பதாகும்.

மாலையில் இசைத் தமிழ் விழா இடம்பெறவுள்ளது. இதில் கல்லூரி மாணவிகளது வீணை இசையொன்று புதுமையான முறையில் நடைபெறவுள்ளது. அதில் உமது சகோதரி மீராவும் பங்குபற்றுகின்றாள். அத்துடன் எமது பாடசாலைப் பழைய மாணவரும், இன்றைய ஆசானுமான திரு. சொ. சசிவருணன் அவர்களது இசைவிருந்தும் இடம்பெறவுள்ளது.

இரவு நிகழ்ச்சி நாடகத் தமிழுக்கு விழாவாக அமைகின்றது. எமது கல்லூரி மாணவர்கள் மேடையேற்றவுள்ள ''துரோணர் சபதம்'' அரங்கேறவுள்ளது. துரோணராக நானே நடிப்பதனால் நீர் கட்டாயமாக அதனைக் கண்டுகளிக்க வேண்டுமென விரும்புகின்றேன். எனது வேண்டுகோளை என் நண்பன் செவிமடுப்பான் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு.

தனிப்பட்ட அழைப்பிதழ்களைப் பாடசாலை அனுப்பாது, பத்திரிகை வாயிலாகவே பெற்றோர், பழைய மாணவர், நண்பர்களுக்கும் அறிவிக்கவுள்ளதால், எனது மடலையே அழைப்பிதழாக நீர் ஏற்றுக்கொள்ளவும். மீதி நேரில்.

அன்புள்ள நண்பன்,
அ. அருட்குமரன்

——— 1992—எமது நாடு அண்மைக்காலத்தில் விளை யாட்டுத் துறையில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து உமது நண்பனுக்கு ஒரு கடிதம் ———

81, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
12.12.92.

அன்பின் நண்பன் சேகருக்கு,

21.11.92. திகதியிட்ட உனது மடல் கிடைத்துள்ளது. அதில் எமது நாடு அண்மைக் காலத்தில் விளையாட்டுத்துறையில் அடைந்த முன்னேற்றங்கள் குறித்து எழுதும்படி குறிப்பிட்டிருந்தாய். அதற்கு அமைய இக் கடிதத்தினை வரைகின்றேன்.

எமது அரசு இன்று விளையாட்டுத் துறைக்கு ஆக்கமும் ஊக்க மும் அளிக்கின்ற போதும் அன்று திரு. எதிர்வீரசிங்கம் திரு. டங்கன் வைற் ஆகிய இருவரும் ஈட்டிக்கொடுத்த சாதனைகள் போல் அண் மைக் காலத்தில் ஒலிம்பிக் போட்டிகளில் எவரும் எவ்விடங்களையும் எமது நாட்டுக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை. ஆனாலும் கடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் நான்காவது இடத்தையும், சாக் நாடுகளின் விளையாட்டுப் போட்டியில்மூன்றாவது இடத்தையும் பெற் றுச் சில தங்கப்பதக்கங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1982 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை உலகக் ''கிறிக்கற்'' போட்டிகளில் கலந்து கொண்டுள்ள போதும் இதுவரையில் பெரிய சாதனைகள் எதனையும் ஏற்படுத்தவில்லை என்றே கூறவேண்டும். ஆனாலும் ஒருநாட் போட்டிகளில் இங்கிலாந்து, இந்தியா, பாக்கிஸ் தான் போன்ற நாடுகளை வெற்றி ஈட்டியுள்ளது. ''கிறிக்கற்'' வீரர் களில் டியுலிப் மென்டிஸ், அரவிந்த டி. சில்வா, அருச்சுண ரணதுங்கா குறிப்பிடத் தக்கவர்களாவர்.

உதைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கொக்கி என்பவற்றில் எமது நாடு உலகப் போட்டிகளில் கலந்து கொள்ளும் நிலையை எய்தா விட்டாலும் ''பிலியட்ஸ்'' விளையாட்டில் காலம் சென்ற M. H. M லவ்பீர் முதலாவது இடத்தைப் பெற்று உலக சாதனையை ஏற்படுத் தியமை எமது நாட்டுக்கு பெருமையளிப்பது ஒன்றாகும்.

எமது நாட்டு வீராங்கனைகள் விளையாட்டுத்துறையில் மெச்சத் தக்க வகையில் பெரும் சாதனைகளை நிலைநாட்டாவிட்டாலும் உலக விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிவருவது குறிப்பிடத்தக்கதா கும். இன்று விளையாட்டுத்துறைக்கென்றே ஓர் அமைச்சு உருவாக்கப் பட்டுள்ளதால் மேலும் இத்துறை வளர்ச்சியுறும் என்று எண்ணத் தோன்றுகின்றது. எனக்கூறி விடை பெறுகின்றேன்.

அன்புள்ள நண்பன்,
சி. சுகந்தன்

## 1993—உல்லாசப்பயணிகள் வருவதால் ஏற்படும் நன்மை தீமைகளைச் சுட்டிக்காட்டிப் பத்திரிகைக்குக் கடிதம்

பெரிய புலம்,
மானிப்பாய்.
12-12-93.

கௌரவ ஆசிரியர்,
வீரகேசரி,
கொழும்பு.

ஐயா,

உல்லாசப்பயணிகளது வருகை எமது சுதந்திர ஈழத்தின் புதிய வருவாய்த்துறையாக வளர்ச்சியுற்று வருகின்றது. பதவியில் இருந்த அரசாங்கங்கள் அனைத்தும் இத்துறைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதும் அளித்ததும் நீங்கள் அறிந்ததே. இதனால் நன்மைகளும் உண்டு தீமைகளும் இல்லாமலில்லை.

முதலில் நன்மைகளை அவதானிப்போமேயானால் எழில் கொஞ்சும் எம்நாட்டுக்கு அன்னியர் அதிகம் வருவதனால் அந்நியச் செலாவணி முதலீடற்ற வருவாயாகக் கிடைக்கின்றது. குடிசைக் கைத்தொழிற் பொருட்கள் பிறநாட்டவரது கவர்ச்சிப் பொருளாக விற்பனையாவதுடன் உலகவர்த்தகத்தில் இடம் பெறவும் உதவுகின்றது.

மற்றும் பிறநாட்டுப் பயணிகள் வசதியாகத் தங்குவதற்கான அழகிய நட்சத்திர விடுதிகள் உருவாகவும், சகல விதப் போக்குவரத்துத் துறைகள் வளர்ச்சியடையவும், வங்கிகள் போன்ற நிறுவனங்கள் உயர்வடையவும் உதவுகின்றது. மேலும் எமது புராதன ஆலயங்கள், அரண்மனைகள், கலைக்கோட்டங்கள் செவ்வனே பாதுகாக்கப்படுவதற்கும் ஊன்றுகோலாக உறுதுணையளிக்கின்றது.

நன்மைகளுக்கு நடுவில் தலைநீட்டி நிற்கும் சில தீமைகளில் முக்கியமானவை, தொற்றுநோய்கள், போதைப் பொருட்கடத்தல், கள்ளக்கடத்தல், உளவறிதல், கலாச்சாரச் சீரழிவுகள் என்பனவாகும். இவற்றை முறையே மருத்துவர்களாலும், சுங்கத் திணைக்களகத்தாலும், காவற்துறையினராலும் கடுமையான கண்காணிப்பால் கட்டுப்படுத்த முடியும் என்பது கண்கூடு.

இறுதியாக தங்கள் பத்திரிகை உள்நாட்டில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் உலாவரும் ஒன்று. நீங்கள் நம்மவர் அடையக்கூடிய தீமைகளை உள்நாட்டுப் பதிப்புக்களில் சுட்டிக் காட்டுவதுடன். வெளிநாட்டுப் பதிப்புக்களில் நாட்டுக்கு நன்மை நல்கும் முறையில் கவர்ச்சியான கட்டுரைகளையும். கண்கவர் விளம்பரங்களையும் வெளியிடுவீர்களானால் நம் நாடு நன்மைபெறும். எனவே இப் பெரும் பொறுப்பை உங்கள் கவனத்திற்குத் தாழ்மையுடன் சமர்ப்பிக்கின்றேன்.

நன்றி

இப்படிக்கு,
உண்மையுள்ள,
ஆ. செல்வன்

விற்பனையாகின்றது

தமிழ் இலக்கியம்
நூறு சொல் வினா விடை

---

தமிழ் இலக்கியம்
சந்தர்ப்பம் கூறல்

---

இலக்கண வழிகாட்டி

---

கடிதங்கள்

விற்பனையாளர்:

பூபாலசிங்கம் புத்தகசாலை

255, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

340, செட்டியார் வீதி,
கொழும்பு-11.

பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்.